[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மொத்தம் இதையொட்டி ரூ. 144 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது, உலக வங்கியின் உதவியோடு. மற்றவை பற்றிய விவரங்கள் இல்லை.

பரப்பலாறு அணைத் திட்டம்.

*வினா எண் 31—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கான செலவு எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் இப்பொழுது எத்தனை ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது?

(இ) அந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கு இதுவரை ரூ. 1,01,00,137·44 செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தினுல் மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பழைய ஆயக்கட்டு 1,323 ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டு 1,000 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 2,323 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளன.

(இ) இல்லை.

சித்தப்பட்டிலம் கால்வாய் திட்டம்.

*வினா எண் 32—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மைபாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏரிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் பயன் அடையும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) திட்டம் மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்விலுள்ளது. இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதனை தற்சமயம் கூற இயலாது.

(ஆ) & (இ): இத்திட்டத்தின் மூலம் 12 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும் எனவும் 871 ஏக்கர் நிலங்கள் பயனடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1979 பிப்ரவரி 13]

திரு. கோ. ரகோத்தமன்: இத்திட்டத்தின் மூலம் இவ்வளவு ஏக்கர் பயன்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுமாதிரி எப்போது எடுத்து நடத்திக்கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடிய விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

EXPORT OF BRICKS, ETC.

*Q. No. 33 THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to export bricks, tiles and potteries manufactured at Government owned brick factories ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அரசின் பரிசீலனையில் இவ்வித செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: இப்போது இந்தச் செங்கல் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல் விலை ஆயிரம் செங்கலுக்கு ரூ. 100, ரூ. 150 என்று விலை அதிகரித்திருப்பது அரசுக்கு தெரியுமா? தனிப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல்லானாலும் சரி அல்லது அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடியதானாலும் சரி விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வீடுகள் கட்டக்கூடிய மத்தியதர வர்க்கத்தினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இதை ஒழுங்குப்படுத்தி செங்கலின் விலையைக் கட்டுப்படுத்த அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-50].

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: செங்கலின் விலை அளவுக்கு மீறிப்போய்க் கொண்டிருப்பதால், செங்கல் உற்பத்தி செய்பவர்களைப் போய் அணுகிக் கேட்கும்போது, தங்களுக்கு போதிய அளவு கரி கிடைக்கவில்லை. முறையான வகையில் தங்களுக்கு கரி கிடைப்பதற்கு அரசாங்கம் வழி செய்து கொடுத்தால் விலையைக் குறைக்கலாம், என்று கூறுகிறார்கள். அரசாங்கம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா? பேரூராட்சிகளில்